


# “சமூகநீதி உரிமைகளைக் காக்க, முற்போக்குச் சக்திகள் ஒன்றிணைவோம்!”

**கழக இளைஞர் அணி நடத்திய, ‘தி.மு.க. 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற முற்போக்கு புத்தகக் காட்சி நிகழ்வில், ‘கருப்பு சிவப்பு நீலம் - கைகோர்க்க வேண்டிய காலம்’ என்ற தலைப்பில், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்க மாநில துணைத்தலைவர் எழுத்தாளர் ஆதவன் தீட்சண்யா அவர்கள் ஆற்றிய உரை :**

“கருப்பு - சிவப்பு - நீலம் என்று கருத்தியல் அடிப்படையில், நாம் கைகோர்ப்பதா இல்லையா என்ற விவாதத்தை நடத்துவதற்கு முன்பாக நீதித்துறை, ஊடகத்துறை, தேர்தல் ஆணையம், நாட்டின் நிர்வாகம் அனைத்தும் ஒன்றாகக் காவியுடன் கைகோர்த்திருக்கின்றன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சூழலில் காவிக்கு எதிராக யாரெல்லாம் கைகோர்க்க வேண்டும் என்பதில், நாம் ஒரு முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது. இன்னும்கூட இந்த மூன்று நிறங்களை இன்னும் சற்றே விரிவுபடுத்தி, இன்னும் கூட விடுபட்டவர்களை எல்லாம் ஒருங்கிணைத்து இது ஒரு பல்வண்ண மாலையாக நாம் மாற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

‘இந்திய சமூகம் எதன் மீது கட்டப்பட்டிருக்கிறது” என்று அம்பேத்கரிடம் கேட்டபோது, அவர் சற்றும் தயங்காமல் ‘ஏற்றத்தாழ்வின் மீது கட்டப்பட்டிருக்கிறது’ என்றார். அந்த ஏற்றத்தாழ்வு அடிப்படையில், பாலின ரீதியாக ஆண் பெண் சமத்துவத்தை ஏற்றுக் கொள்வதில்லை. அம்பேத்கர் ஆய்ந்து சொன்ன அந்த விஷயத்தை, இன்றைக்கும் உறுதிப்படுத்துவதற்கு ஏராளமான தரவுகள் வந்துகொண்டே இருக்கின்றன.

## பாலினப் பாகுபாடும் பொருளாதாரப் பாகுபாடும்

சமீபத்தில் ஐ.நா. அவை ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. ஆண் பெண் பாகுபாடு என்கிற பாலினப் பாகுபாட்டைக் கடப்பதற்கான சமத்துவத்தை நோக்கி, நகர்வதற்கான சட்டங்கள் இன்றைக்கு உலகின் பல்வேறு நாடுகளில் இயற்றப்பட்டிருக்கின்றன. அப்படி இயற்றப்பட்ட சட்டங்களை எல்லாம் தீவிரமாக இன்று முதல் அமல்படுத்தத் தொடங்கினால்கூட பாலினப் பாகுபாட்டை முழுமையாகக் களைவதற்கு 281 வருடங்கள் தேவை என்று ஐ.நா. அவை அறிக்கை சொல்கிறது. அப்படியென்றால், பெண்கள் பின்தங்கி இருக்கிறார்கள் என்று பொருள் அல்ல, பெண்களை சமமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய மனநிலையிலிருந்து, ஆண்கள் 280 வருடங்கள் பின்தங்கி இருக்கிறார்கள் என்றுதான் பொருள்.

பொருளாதாரப் பாகுபாடு குறித்த இன்னொரு புள்ளிவிவரம், உலகத்தின் மக்கள்தொகையில் 10% மட்டுமே இருக்கக்கூடிய பணம் படைத்த, வசதி படைத்த, பில்லியனர்ஸ் பட்டியலில் இருக்கக்கூடியவர்கள் அன்றாடம் 10 லட்சம் டாலர் செலவழித்தால், முழுமையாக அவர்கள் செலவழித்து முடிப்பதற்கு 440 வருடங்கள் தேவைப்படுகிறது என்று சொல்கிறது. இன்னொருப் பக்கம் புத்தகக் கண்காட்சிக்கு வந்துவிட்டு புத்தகத்தை வாங்கலாமா, வேண்டாமா என்று பாக்கெட்டைத் தடவிப் பார்க்கக்கூடிய நிலையும் நம்மிடம் இருக்கிறது.

பாலினரீதியான, பொருளாதார ரீதியான இந்தப் பாகுபாடு என்பது உலகளாவிய அளவில் இருக்கிறது. அது இந்தியாவிலும் இருக்கிறது. ஆனால், உலகின் மற்ற சமூகங்களில் இல்லாத இன்னொரு கூடுதலான ஒரு பாகுபாடு எது என்று சொன்னால் அது இந்திய துணைக்கண்டத்தில் இருக்கக்கூடிய சாதியப் பாகுபாடு. இந்தச் சாதியப் பாகுபாடு என்பதுதான் இந்தியாவில் நிலவக்கூடிய பாலின பாகுபாட்டிற்கும், பொருளாதாரப் பாகுபாட்டிற்கும், மத ரீதியான பாகுபாட்டிற்கும் வழி வகுக்கிறது. அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், இடதுசாரி இயக்கங்களின் ஆய்வுகள் எல்லாமே அந்த இடத்தில்தான் வந்து நிற்கின்றன.

## சாதி பாகுபாடு

சாதிதான் மனிதர்களை மட்டுமல்ல, இந்த நாட்டின் இயற்கை வளங்களை, இந்த நாட்டின் பொதுச்சொத்தை, இந்த நாட்டின் அறிவு வளங்களை, பண்பாட்டு அதிகாரத்தை, அரசியல் அதிகாரத்தை எல்லாவற்றையுமே பாகுபாடாகப் பிரித்து வைத்திருக்கிறது.

சாதி அடுக்கு என்பது கிட்டத்தட்ட நம்முடைய கோயில் கோபுரங்களைப் போலத்தான் இருக்கிறது, கோயில் கோபுரத்தின் அஸ்திவாரம் எப்படி பூமிக்குள் மறைந்திருக்கிறதோ அதைப் போல நாட்டின் மக்கள் தொகையில் பெரும்பான்மை யானவர்கள் அடித்தளத்தில் இருக்கிறார்கள். எண்ணிக்கையில் சிறுபான்மையாக இருக்கக் கூடியவர்கள் உச்சியில் இருக்கிறார்கள். மேலிருந்து கீழாக இருக்கக்கூடிய இந்தச் சாதி அமைப்பில் ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு அடுக்கிலும், ஒவ்வொரு சாதி அடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அடுக்கை நீங்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் மாற்றிக்கொள்ளவே முடியாது. சாதி என்பது இன்னொரு சாதிக்கு சமமற்றதாகத்தான் இருக்கும்.

ஆசிய வளர்ச்சி வங்கியின் தலைமைப் பொருளியலாளராகப் பணியாற்றிய அரவிந்த் பனகாரியா ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்கிறார். 2011 சென்சஸ் அடிப்படையில் இந்தியாவில் உள்ள சாதிகளின் பெயரை எல்லாம் வரிசையாக எழுதி, ஒரு நாளைக்கு 12 மணி நேரம் படித்தால் 355 நாள் சாதிப் பெயரைப் படிக்க வேண்டுமாம். சாதிப் பெயரைப் படிப்பதற்கே 355 நாள் என்றால் சாதியை ஒழிப்பதற்கு எத்தனை நாள் ஆகும் என்று யோசித்துப் பாருங்கள். 47 லட்சம் பெயர்களில் இருக்கக்கூடிய சாதி உட்பிரிவில் ஒன்று கூட இன்னொரு சாதியைச் சமம் என்று ஏற்றுக்கொள்ளாது.



**எழுத்தாளர் ஆதவன் தீட்சண்யா**
**தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்க மாநில துணைத்தலைவர்**

## மாறாததா சனாதனம்?

நீங்கள் சாதியை ஒழிக்க வேண்டுமானால், வர்ணாசிரமக் கோட்பாட்டை விமர்சித்து தமிழ்ச் சமூகத்தில் தொடர்ச்சியான உரையாடல்களை நாம் முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. சனாதனம் என்றால் ‘மாறவே மாறாதது’ என்று விளக்கம் கொடுக்கப்படுகிறது. கோயிலில் மணி அடிப்பதற்குப் பதிலாக, அதை தொலைபேசியில் பதிவுசெய்து வைத்துக்கொண்டு, பூஜை செய்கிற நேரத்தில் அலைபேசியை ஆன் செய்து மணி ஆட்டுகிற சத்தத்தைக் கேட்டுக்கொண்டு பூஜையை முடிக்கிறார்களே, அப்போது அந்த சடங்கு மாறியிருக்கிறதே, அப்போது சனாதனம் எங்கே போனது?

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**எழுத்தாளர் ஆதவன் தீட்சண்யா பேசுவதற்கு முன்பு, திருவண்ணாமலை மாவட்டம், பாப்பம்பாடி முனுசாமி குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. தங்கள் உடலில் பெரிய மேளத்தைக் கட்டிக்கொண்டு, உருண்டு புரண்டு, சாகசத்தையும் இசையையும் இணைத்து, இவர்கள் நிகழ்த்திய கலைநிகழ்வு பெரும் வரவேற்பைப் பெற்றது. 40 ஆண்டுகளுக்கும் மேலாக கலைச்செயற்பாட்டில் இருக்கும் தனக்கு மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசு ‘கலைமாமணி விருது’ அளித்ததை, ‘பாப்பம்பாடி’ முனுசாமி பெருமையுடன் நினைவுகூர்ந்தார்.**

கருப்பு - சிவப்பு - நீலம் கைகோர்க்க வேண்டுமானால் நாம் தனிப்பட்ட நபர்களுக்கு எதிராகக் கைகோர்க்கப் போவதில்லை, தமிழ்ச் சமூகத்திற்காகக் கைகோர்க்க வேண்டியிருக்கிறது. தமிழ்ச் சமூகத்துக்கு இன்றைக்கு என்ன அவ்வளவு பெரிய ஆபத்து வந்துவிட்டது என்றால், தமிழ்ச் சமூகத்துக்கு மட்டுமல்ல, இந்திய சமூகத்தையே வருணாசிரமம், சனாதனத்தை நோக்கி நகர்த்தும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இதை நாம் இப்போது எதிர்க்காவிட்டால், தமிழ்ச் சமூகம் இன்றைக்கு அடைந்திருக்கக்கூடிய முன்னேற்றங்கள், இந்தியப் பெண்கள் அடைந்திருக்கக்கூடிய முன்னேற்றங்கள், கல்வியில் நாம் அடைந்திருக்கக்கூடிய முன்னேற்றங்கள் இவை எல்லாவற்றையுமே நாம் இழக்க வேண்டியிருக்கும். இதைச் சொன்னால் ‘பா.ஜ.க. உள்ளே வந்துவிடும் என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள்’ என்று சொல்கிறார்கள்.

## பா.ஜ.க. எதிர்ப்பு பூச்சாண்டியா?

நாமெல்லாம் நியூஸ் பேப்பரில் பஜ்ஜி சுருட்டிக்கொடுத்தால்கூட அதை ஏற்க மறுப்போம். ஆனால் பா.ஜ.க. ஆள்கிற மத்தியப்பிரதேசத்தில் பள்ளிக்குழந்தைகளுக்கு நியூஸ்பேப்பரில் சாப்பாடு போடுகிறார்கள். பா.ஜ.க உள்ளே வந்தால்தான் தெரியும், அது எவ்வளவு கொடூரமானது என்று. ஏனென்றால் மற்ற கட்சிகளில் எல்லாம் வழக்கறிஞர் அணி வரைக்கும்தான் இருக்கிறது. ஆனால் பா.ஜ.க.வோ நீதிபதி அணியும் வைத்திருக்கிறது. தேர்தல் ஆணையத்தைக் கொண்டு தேர்தலையே ஒழிக்கத் திட்டமிடுகிறார்கள்.

## நமக்குள் இருக்கும் பார்ப்பனியம்


இதையெல்லாம் எதிர்க்க வேண்டுமானால், நமக்குள்ளும் இருக்கும் சனாதன, பார்ப்பனியச் சிந்தனைகளை நீக்கம் செய்ய வேண்டும். சாதி என்பதே தீட்டு என்பதில் இருந்துதான் தொடங்குகிறது. ஒரு வீட்டைக் கட்டுகிறார்கள் என்றால், அந்த வீட்டைப் பல சாதிகள் சேர்ந்துதான் உருவாக்குகிறார்கள். அப்படிப் பல சாதியினர் சேர்ந்து உருவாக்கியதனால் அந்த வீடு தீட்டாகிவிட்டது என்று கருதி, சொந்தபந்தமெல்லாம் வருவதற்கு முன்பு, விடியற்காலம் புரோகிதரை அழைத்து வந்து, நன்றாக இருந்த வீட்டில் மாட்டு மூத்திரத்தைத் தெளித்து நாற்றம் அடிக்க வைத்து, புண்ணியதானம் செய்கிறோம். தீட்டு என்ற கருத்தாக்கத்தையே காலி செய்ய வேண்டும். அதைக் காலி செய்கிற வரைக்கும் குறைந்தபட்சம் இயக்கங்களில் இருக்கக்கூடிய நண்பர்கள், தோழர்களாவது இந்தப் புண்ணியக் சடங்குகளுக்கு எல்லாம், வெளியே இருந்து வர வேண்டாம். உங்கள் அப்பா, அம்மாவை அழைத்து, இதையெல்லாம் செய்துகொள் என்று சொல்ல வேண்டும்.

## சமூகநீதி

நமக்கு மனித சமூகத்தில் இயற்கை நீதி இருந்தது. பிறகு அதற்கு எதிராக மனுநீதி வந்தது. அதை எதிர்த்துப் போராடி, நாம் இப்போது சமூகநீதிக் காலத்தில் நின்று கொண்டிருக்கிறோம். இந்தச் சமூகநீதிக் காலத்தை எவ்வளவு வலுப்படுத்துகிறோமோ அவ்வளவுக்கு சமத்துவ நீதி என்கிற இறுதி கட்டத்தை நோக்கி நாம் நகர முடியும்.

கருப்பு, சிவப்பு, நீலம் எதற்கு ஒன்று சேர வேண்டும் என்றால், சமூகநீதி என்கிற இந்தக் கட்டத்தை இதனுடைய வெற்றியை, முன்னேற்றத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத்தான் நாம் ஒன்று சேர வேண்டியிருக்கிறது. நமக்கான இரண்டு எதிரிகளை அம்பேத்கர் சுட்டிக்காட்டிச் சென்றிருக்கிறார். ஒன்று பிராமணியம், இன்னொன்று முதலாளித்துவம்.

பாகுபாடுகளுக்கு எதிரான தத்துவங்கள் என்ற அடிப்படையில், பெரியாரியத்தையும் அம்பேத்கரியத்தையும் மார்க்சியத்தையும் உயர்த்திப் பிடிப்பது என்பதும், இந்த உயர்த்திப் பிடித்த தத்துவங்களின் வெளிச்சத்தில் நம்முடைய மக்களின் மனங்களை வென்றெடுப்பது என்பதும் மிக அவசியமாக இருக்கிறது. அதற்கு இங்கே நடக்கக்கூடிய இந்தச் சென்னை முற்போக்கு புத்தகக் காட்சி ஒரு வழியாக இருக்கும் என்று இந்த நேரத்தில் கருதி உங்கள் அனைவருக்கும் நன்றி சொல்லி விடைபெறுகிறேன். ●



* பாப்பம்பாடி முனுசாமி குழுவினரின் கலை நிகழ்ச்சி